# திருவருகைக்காலம் 3 வது ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு **B**

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம் 61: 1-2a, 10 -11,
பல்லவி: என் கடவுளில் என் உள்ளம் பூரிப்படையும்.
திருத்தூதர் பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 5: 16-24,
யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 1: 6-8,19-28 )

## திருப்பலி முன்னுரை:

அன்பு இறைவனில் நம்பிக்கையும் பற்றும் கொண்டுள்ள அன்புச் சகோதர சகோதரிகளே, இன்று மகிழ்ச்சியின் ஞாயிறைச் சிறப்பிக்கிறோம். மகிழ்வையும் நிறைவையும் வழங்கும் இறைத்திட்டத்தில் பங்கேற்க அணியமாயிருந்து இன்று திருவருகைக்காலம் மூன்றாம் வாரம் ஞாயிறு திருப்பலி வழிபாட்டில் பங்கேற்கும் உங்கள் அனைவரையும் மகிழ்வோடு வரவேற்கிறேன், வாழ்த்துகிறேன்.

இறைவன் நம் ஒவ்வொருவரையும் அழைத்துள்ளார். அதுவும் நம் பெயரைச் சொல்லி அழைத்துள்ளார். அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் தமது அழைப்பின் மேன்மையை உணர்ந்து வாழ வேண்டும். திருமுழுக்கு யோவானைப் போன்று தாழ்ச்சி நிறைந்த உள்ளத்தோடு, வெறுமை நிறை மனதோடு நாம் வாழ இன்று இறைவன் நம்மை அழைக்கிறார். எனவே அவரை ஆசீர்வதித்தது போல, நம்மையும் ஆசீர்வதிக்க விரும்புகிறார். அமைதி அருளும் ஆண்டவரால் நமது உள்ளமும், ஆன்மாவும், உடலும் முழுமைபெற விரும்பினால் வெறுமை நிறைந்த, தாழ்ச்சி நிறைந்த மனதோடு இயேசுவின் பிறப்பிற்காக காத்திருந்து, விழித்திருந்து, செபத்தில் நிலைத்திருந்து தகுந்த தயாரிப்போடு இருக்க அருள்வேண்டி செபிப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**01. எல்லாம் வல்ல இறைவா,**
எம்திருத்தந்தை, எம் ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் நீர் நிறைவாக ஆசீர்வதியும். நற்செய்தியை அறிவிப்பதே எனது கடமை என்பதை உணர்ந்து செயல்பட தேவையான தூய ஆவியின் அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**02. தியாகத்தின் இறைவா,**
எம் பங்கிலுள்ள அனைத்து அன்பியங்களும் சிறப்பாக செயல்பட்டு எம் பங்கை ஒரு அன்பிய சமூகமாக உருவாக்கிட அனைவரும் சிறப்பாக உழைக்க தேவையான அருளைத்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**03. தூயவரான தந்தையே!**
உம்முடைய பிள்ளைகளாகிய நாங்கள், எப்பொழுதும், மகிழ்ச்சியாக இருக்கவும். இடைவிடாது இறைவனிடம் வேண்டவும் எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறவும். எங்களுள் தூய ஆவியின் செயல்பாட்டைத் தடுக்காதிருக்கவும, இறைவாக்குகளைப் புறக்கணிக்காது அனைத்தையும் சீர் தூக்கிப்பார்த்து, நல்லதைப் பற்றிக்கொண்டு, எல்லா வகையான தீமைகளையும் விட்டு விலகி வாழவும் வேண்டிய ஆற்றலை எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**04. பசித்தோரை நலன்களால் நிரப்பும் தந்தையே!**
உலக நாடுகளில் அனைத்திலும் உண்மைக்காகவும், நீதிக்காகவும், விடுதலைக்காகவும், உரிமை வாழ்வுக்காகவும், அன்புக்காகவும் தாகித்து நிற்கும் அனைவரையும், அவர்களின் குறைகளைப் போக்கி நிறைவு செய்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**5. அன்பே உருவான எம் இறைவா!**
இயற்கைப் பேரிடராலும், பொருளாதார மாற்றங்களால் அவதிபடும் மக்களுக்கு நலமும் வளமும் நிறைவான வாழ்வும் கிடைத்திடவும், ஆள்வோரின் கரிசனையும், பாதுகாப்பும் பெற்றடவும், சிரம்மின்றிப் பொருளாதார ஏற்றம் பெற்றடத் தேவையான வரங்களைப் பொழியவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.